பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 20 புதன்கிழமை 02.02.2022 கதிர் 89

**இது ரகசியம் அல்ல!**

அரசியல் என்றாலே நடிப்பு என்றுதான் அர்த்தம். அதிலும் நமது தமிழ் அரசியல் பிரமுகர்களின் மகா நடிப்பு வானத்தைத் தொடும்.

நாற்றம் தாங்க முடியாத சேறு தங்கள் மீது வீசப்படும் போதும், அதை அநாசயமாக

2

# ராஜபக்ஷ குடும்ப அரசின் வீழ்ச்சிக்கு முட்டைத் தாக்குதல் எடுத்துக்காட்டு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

**கம்பஹாவில் சில தினங்களுக்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணி மீது முட்டைத் தாக்குதல் மேற்கொண்டமையும், ஜே. ஆர்.ஜெயவர்தனவின் பேரன் மீதான முட்டைத் தாக்குதல் சம்பவமும் அண்மைக் காலமாக ராஜபக்ஷ குடும்ப அரசும் சமூகமும் சீரழிந்து வருவதன் அளவை எடுத்துக்காட்டுகின்றன என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

11



## இரு பொலிஸ் குழுக்கள் நடுவீதியில் முட்டிமோதல்

### மூவர் வைத்தியசாலையில் சேர்ப்பு



இரண்டு திருமண நிகழ்வுகளில் கலந்துகொண்டு மீண்டும் திரும்பிக் கொண்டிருந்த இரு பொலிஸ் குழுக்களுக்கு இடையில் வரகாப்பொல பிரதேசத்தில் மோதல் ஒன்று

11

## கோட்டா, மஹிந்த மற்றும் 16 படை அதிகாரிகள் மீது தடை விதிக்குமாறு பிரிட்டன் அரசிடம் வேண்டுகோள்



கோல்போர்ன்

இலங்கையின் கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் படை அதிகாரிகள் என 18 பிரமுகர்கள் மீது சர்வதேச தடைகளை விதிக்குமாறு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தென்னிலங்கை சிங்கள ஊடகமொன்று பரபரப்புதகவலை வெளியிட்டுள்ளது.

கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரான எலியட் கோல்போர்ன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தடைகள் பட்டியல் தாக்கல்

11

## யாழ். பல்கலை உதவி விரிவுரையாளர் தில்காந்தி சிகிச்சை பலனின்றி மரணம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடகக்கற்கைத் துறையில் தற்காலிக உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிய இளம் பெண் உயிரிழந்துள்ளார்.

மொனராகலை - மரக்கலையைச் சேர்ந்த நவரட்ணம் தில்காந்தி (வயது 26) என்பவரே இவ்வாறு

2

## நேற்றும் ஆயிரத்தைக் கடந்த கொரோனாத் தொற்றாளர்கள்

இலங்கையில் நேற்று மேலும் 1,137 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுஉறுதியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத்தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 6 லட்சத்து 12 ஆயிரத்து 322 ஆக அதிகரித்துள்ளது.

## வெடிகுண்டு மீட்பு!



(எஸ்.நிதர்ஷன்)

பலாலிப் பகுதியில் வெற்றுக் காணியில் வெடிகுண்டு ஒன்று விசேட அதிரடிப் படையினரால் நேற்று மீட்கப்பட்டது.

குறித்த காணியில் சந்தேகத்துக்கிடமான

11

## கோண்டாவிலில் வீடு புகுந்து தாக்குதல் மூவரை விரைந்து மடக்கியது பொலிஸ்

### காதல் விவகாரத்தால் எழுந்த சர்ச்சையாம்



கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியவர்கள் என்று கருதப்படும் மூவரை விரைந்து செயற்பட்ட கோப்பாய் பொலிசார் கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த குழு ஒன்று கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் மீது அத்துமீறி நுழைந்து தாக்குதலை நடத்தியது.

2

## ஓட்டோவுடன் ரயில் மோதி கோர விபத்து; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலி!

காலி, பூஸா - வெல்லப்படபகுதியில்கடவையூடாகக் கடந்த ஓட்டோவை ரயில் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து நேற்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றதுஎனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடனேயே இந்த ஓட்டோ மோதுண்டது.

காலி, பூஸா பகுதியைச் சேர்ந்த தந்தை, தாய், மகன் மற்றும் மருமகள் ஆகியோர்

2



## வாகன விபத்தில் இருவர் மரணம்!

வரகாப்பொல, துல்ஹிரிய பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2

## கொரோனா மரணம் சடுதியாக அதிகரிப்பு

### ஒரே நாளில் 32 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 32 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2



## மருதங்கேணி பிரதேச செயலகம் அப்பகுதி மீனவர்களால் முற்றுகை

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக அப்பகுதி மீனவர்கள் நேற்றுக் காலை 7.30 மணி முதல் முற்றுகைப் போராட்டம் மேற்கொண்டனர்.

அண்மையில் வத்திராயன் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களின் உயிரிழப்புக்கு நீதி கோரியும், இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க கோரியும்

2

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## இனி இது ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கிக் கொண்டு, தங்கள் மீது பன்னீர் தெளிக்கப்பட்டதாக விடயத்தை திசை திருப்புவது மட்டுமல்ல, அந்த நாற்றம் எடுக்கும் சேற்றையும் முகர்ந்து சகித்துக் கொண்டு, அதை நறுமணம் என்பார்கள். அதற்கான ஓர் உதாரணம் இன்று.

கடந்த ஞாயிறு எனது பத்தியில் அதற்கு முதல் நாள் வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் பற்றிய தகவல்களை விவரித்திருந்தேன்.

அதில், தமிழ்க்கட்சிகளின் கூட்டத்துக்கு ரெலோ சார்பில் இணைப்பாளராக இணைக்கப்பட்டு செயற்பட்ட அக்கட்சியின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரனின் நம்பகத் தன்மையற்ற தப்பிலித்தனப் போக்கை அந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியினர் விலாவாரியாக வைதமைமையை நான் மேலோட்டமாக விவரித்திருந்தேன். அதில் எதுவும் என்னால் இட்டுக் கட்டி எழுதப்பட்டவையல்ல. அங்கு பரிமாறப்பட்ட கருத்துகளையே நான் விவரித்திருந்தேன்.

அதை வாசித்தவர்களுக்கு, தமிழ்க் கட்சிகளின் கூட்டத்திற்கான இணைப்பாளராகச் செயற்பட்ட சுரேந்திரன் அக்கூட்டத்தில் சுமந்திரன் தயாரித்த கடிதத்தின் நகலை இறுதி நேரத்தில் சுமந்திரனுக்குத் தெரியாமல் கரவாகச் சில மாற்றங்களை செய்தார் என்பதில் தொடங்கி, ஆங்கிலம் அதிகம் தெரியும் என்ற நினைப்பில் சுமந்திரனுக்குப் பாடம் எடுக்க முயன்று வாங்கிக் கட்டிக் கொண்டார் என்பது வரை எல்லா விடயங்கள் புரிந்திருக்கும்.

மேற்படி இணைப்பாளர் பொறுப்பில் இருந்தவர் சுத்துமாத்துப் பண்ணினார், தான் நடக்க வேண்டிய நடுநிலைப் பொறுப்புக்கு நியாயமாகவோ நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவோ நடக்கவில்லை, கரவாகச் செயற்பட்டார், மோசடித்தனமாக நடந்து கொண்டார் என்பது தான் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் பிரதிபலிக்கப்பட்டது. அதுவே எனது பத்தியிலும் விவரிக்கப்பட்டது.

ஆனால் அப்படிப்பட்ட சேறை, தன் மீது தெளிக்கப்பட்ட பன்னீர் போல காட்டி சமாளிக்க முயன்றிருக்கிறார் சுரேந்திரன் – தன் முகப் புத்தகப் பதிவு மூலம்.

1.என் அன்றைய பத்தியை வாசித்தவர்களுக்கு பலதரப்புக் கூட்டுச்செயற்பாட்டில் இணைப்பாளர் பணிக்கு கூட நம்பகத் தன்மை அற்றவர் சுரேந்திரன் என்பது புரிந்திருக்கும்.

ஆனால் சுரேந்திரனோ தன்னுடைய அத்தகைய தப்பிலித்தனச் செயற்பாட்டை தமிழரசு மத்திய குழுவும், என் பத்தியும் பெரும் சாதனையாகக் காட்டுவது போல அர்த்தப்படுத்தித் தனது அடுத்த தப்பிலித்தனத்தை முன்னெடுக்கின்றார்.

சுரேந்திரனின் திரிப்பு

*“இந்தியப் பிரதமருக்கு அனுப்பட்ட கடிதத்தின் வரைபு என்னால்தான் வரையப்பட்டதாகவும் அது முழுவதும் என்னாலேயே இறுதி செய்யப்பட்டதாகவும் அந்தப் பத்தி சுட்டிக் காட்டியுள்ளது.*

*“இந்த கடித வரைபு இறுதி செய்யப்பட்ட பின்னர் அதற்கு தாமே காரணம் என ஒரு சிலர் போட்டி போட்டு உரிமை கோர முற்பட்டாலும், அதில் சேர்க்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட வசனங்கள், ஏன் ஒரு எழுத்தைக் கூட தீர்மானிப்பவனாக நான்தான் இருந்துள்ளேன் என்பதை அந்தப் பத்தி ஆதாரப்படுத்தியுள்ளது.”* – என்று தெரிவித்துள்ளார் சுரேந்திரன்.

அதாவது, சுமந்திரன் தயாரித்து இறுதி செய்த கடித வடிவத்தை, மேற்கொண்டு இணைப்பாளர் என்ற முறையில் தலைவர்களிடம் கையளித்து ஒப்பம் பெற ஒப்படைக்க, யாருக்கும் (அந்தத் தலைவர்களுக்கோ, சுமந்திரனுக்கோ) தெரியாமல், களவாக மாற்றம் செய்து விட்டு, நம்பகத் தன்மைக்கு மாறான தமது அந்தத் தப்பிலித்தனத்தை தமது திறமையாகவும், தனக்கான பெருமையாகவும், நான் குறிப்பிட்டுள்ளேன் என அர்த்தம் பண்ணிக் காட்ட முயல்கின்றார் அவர் – படு நாற்றச் சேற்றை முகர்ந்து கொண்டு அதை நறுமணப் பன்னீர் என்பது போல.

2. இந்தக் கடிதம் இந்திய பிரதமருக்கு அனுப்பப்பட முன்னரே – நகல் வடிவத்தில் இருக்கும் போதே – அதனை சுரேந்திரன் தான் (தயவுசெய்து கவனிக்கவும் ‘சுரேந்திரன்’ எனப் பெயர் குறிப்பிட்டு சுமந்திரன் கூறுகிறார்) ஏனைய நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு அனுப்பினார் என அந்த இராஜதந்திரிகள் தம்மிடம் நேரடியாகக் கூறினர் என்று சுமந்திரன் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். அதையும் நான் என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். சுமந்திரன் பகிரங்கமாகக் குறிப்பிட்ட அந்தக் குற்றச்சாட்டுக்கு இதுவரை பதிலே கூறாத சுரேந்திரன் இப்போது எனது பத்தியை காட்டி பின்வருமாறு சமாளிக்க முயல்கிறார்:–

*“ஒரு பாரம்பரிய கட்சியினுடைய மிக இரகசியமான மத்திய குழுக் கூட்ட விடயங்களே துல்லியமாக ‘காலைக்கதிரில்’ வரும் அளவிற்கு இருக்கின்ற சூழ்நிலையில், பத்து கட்சிகளிடம் பகிரப்பட்ட ஆவணம் வெளிவருவதை என்னால் கட்டுப் படுத்தவோ பொறுப்பேற்கவோ முடியாது என்பதையும் இதன் மூலம் புரிந்து கொள்வீர்கள்.”* – என சமாளிக்கின்றார் அவர்.

கட்சி உள்வீட்டு விடயங்களை மோந்து பிடித்து எழுதுவதுதான் ஊடகவியலாளர்களான எங்களின் பரவணிப் பழக்கம். வேலை. அதுவும் சுமார் ஐம்பது உறுப்பினர்களைக் கொண்ட தமிழரசு மத்திய குழுக் கூட்டத்தில் நடந்தவற்றை அறிவதற்கு அப்படி ஒன்றும் விசேட திறமை தேவையில்லை.

ஆனால், தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்களின் முக்கிய கூட்டத்தின் இரகசியத்தை – அங்கு முடிவு செய்யப்பட்ட ஆவணத்தின் நகலை – அதுவும் இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படும் கடிதத்தில் கடைசி ஒப்பம் வைக்கப்பட்டு அது இறுதி செய்ய முன்னரே – அதனை பிற நாட்டு இராஜதந்திரிகளுக்கு அனுப்பும் ‘ஏஜெண்ட்’ வேலையைச் செய்து விட்டு, அதை மூடி மறைத்துச் சமாளிப்பதற்கு என் பத்தியின் திறமையை அவர் முன்னிறுத்துவது அவரது அடுத்த தப்பிலித்தனமாகும்.

அவரது முகப்புத்தக பதிவில் அவர் குறிப்பிட்ட விடயங்கள் ஒவ்வொன்றும் நெத்தியடியாக மறுக்கப்பட்டு, உண்மை அம்பலப்படுத்தப்பட வேண்டும். என்றாலும் அவரது அந்தத் திசை திருப்பல் சமாளிப்பு விளக்கங்களுக்கு இவ்வளவு தூரம் இடம் கொடுத்ததே அதிகம் என்பதால் இத்தோடு விட்டு விடுகிறேன்.

ஆனாலும் தம் மீது பெரும் நாற்றத்தோடு வீசப்பட்ட சேற்றை முகர்ந்தபடி அது நறுமணம் வீசும் பன்னீராக சுரேந்திரன் காட்ட முயல்வது மூன்றாந்தர அரசியல் தப்பிலித்தனம்தான். அதில் சந்தேகமில்லை.

**- மின்னல் -**

## மருதங்கேணி பிரதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மருதங்கேணி பிரதேச செயலகத்தின் இரண்டு வாசல்களையும் முடக்கி பிரதான வீதியில் அமர்ந்திருந்த மீனவர்கள், ‘எமது கடற்பரப்பு இந்தியாவுக்கு விற்கப்பட்டதா?’, ‘உயிரைக் குடிக்கும் இந்தியப் படகைத் தடுத்து நிறுத்து’, ‘இந்தியப் படகுகளுக்கு நாங்கள் இரையா?’, ‘வலை வீச உயிர்ப் பயம் என்ன செய்வோம்?’, ‘எமது கடல் எமக்கு வேண்டும்’, ‘கடற்றொழில் அமைச்சே திரும்பிப்பார்’, ‘மீனவர்களைக் கொல்லாதே’ – போன்ற கோஷங்களையும் எழுப்பினர்.

சிலமணி நேரங்களின் பின்னர் அங்கு வருகைதந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போராட்டக்காரர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்திய மீன்பிடிப் படகுகளின் வருகையைத் தடுப்பதாகவும், எதிர்வரும் திங்கட்கிழமை பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு நட்டஈடு வழங்குவது சம்பந்தமாக விசேட அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது இலங்கைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்தியப் படகுகளைத் தடுத்துக் கைப்பற்றுவது தொடர்பிலும், அவ்வாறு அதனை மீறி வருகை தந்தால் அவற்றை இலங்கை மீனவர்கள் பிடிப்பதற்கு அனுமதி கொடுக்க எழுத்து மூலம் அனுமதி தர வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் போராட்டக்காரர் ஒருவர் கோரிக்கை விடுத்தார்.

நான் வாயால் சொல்லும் வாக்குறுதியும் எழுத்தில் தரும் வாக்குறுதியும் ஒன்றுதான். அதனால் எனது வாக்குறுதியை நம்புங்கள் எனக் கூறியபோது அதனைப் போராட்டக்காரர்கள் ஏற்க மறுக்கவே அங்கிருந்து கடற்றொழில் அமைச்சர் வெளியேறிச் சென்றார்.

இதையடுத்து உயிரிழந்த மீனவர் இருவரின் இறுதிச் சடங்கையும் மேற்கொள்ளும் பொருட்டு தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிடுவதாகவும், நீதி கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் போராடுவோம் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் காரணமாக மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அலுவலகத்துக்குள் நுழைய முடியாமல் வெளியில் காத்திருந்தமையுடன் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டும் இருந்தனர்.

## கொரோனா மரணம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 15 ஆண்களும், 17 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 473 ஆக உயர்வடைந்துள்ளது.

## வாகன விபத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டோ ஒன்றும் மற்றும் அரச பஸ் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கோண்டாவிலில் வீடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சி.சி.டி.வி. காட்சிகளை அடிப்படையாக வைத்து விரைந்து செயற்பட்ட கோப்பாய் பொலிஸார் சந்தேகநபர்களைக் கைது செய்தனர்

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ் வண்ணார்பண்ணை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் காதல் விவகாரம் காரணமாக இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

## ஓட்டோவுடன் ரயில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டோவில் பயணித்தனர். மூவர் சம்பவ இடத்தில் பலியாகினர். மற்றைய ஒருவர் படுகாயமடைந்த நிலையில் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார். (முன்னர் வந்த செய்தி 10 ஆம் பக்கத்தில்)

## யாழ். பல்கலை உதவி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

குறித்த பெண் இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

ஊவா மாகாணத்தின் பின்தங்கிய பிரதேசம் ஒன்றில் இருந்து யாழ். பல்கலைக் கழகத்தில் ஊடகத்துறையில் கல்வி கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று அதே பல்கலைக்கழகத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியதன் மூலம் இவர் தமது சொந்த ஊருக்கும் மலையகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அத்துடன் செய்தி வாசிப்பு மற்றும் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தல் போன்ற துறைகளிலும் அவர் யாழ். பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்தபோதே தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






## உங்களுக்கு உதவ நாங்கள் ரெடி! நீங்கள் ரெடியா?

- நீங்கள் இலங்கையில் உள்ள ஏதாவது பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவரா,
- வெளிநாட்டு மேற்படிப்புக்காக உங்களைத் தயார்ப் படுத்திக் கொண்டு இருப்பவரா?
- பட்டப்படிப்பு முடித்து விட்டு ... பிரிவுகளில் இலங்கையில் வேலை தேடுகிறீர்களா,
- பட்டப்படிப்பினைத் தொடர்ந்து சுயமாக தொழில் முயற்சியில் ஈடுபட விருப்பம் உண்டா?

மேலே உள்ள ஏதாவது ஒரு வினாவுக்கு "ஆம்" என்ற பதில் இருப்பின் நீங்கள் எங்களுடன் உடனடியாத் தொடர்பை மேற்கொள்ளுங்கள் .
உங்கள் மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.
தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு உதவ நாம் தயாராக உள்ளோம்.

**நெம்பு அறக்கட்டளை**
மொறட்டுவை பல்கலைக்கழக
பழைய மாணவர்கள் 95/96 பிரிவு
Nembu9596@gmail.com

# பறவைகள் பார்வை கோபுரம் வைபவ ரீதியாகத் திறப்பு!



## மன்னாரில் நேற்று நடந்தது

மன்னார் மாவட்டத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டத்துக்கு பருவ காலங்களில் வருகை தரும் வெளிநாட்டு பறவைகளை பார்வையிடுவதற்கா ன பறவைகள் பார்வை கோபுரம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யு.என்.டி.பி. நிதி அனுசரணையில் 70 லட்சம் ரூபா செலவில் 35 அடி உயரத்தில் அமைக்கப்பட மன்னார் பிரதான பாலத்துக்கும் தள்ளாடி சந்திக்கும் இடையில் உள்ள வங்காலை பறவைகள் சரணாலயம் பகுதியில் அமைக்கப்பட்ட பறவைகள் பார்வைக் கட்டடக் கோபுரத்தை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஸ்ரான்லி டிமெல் மற்றும் யு.என். டி.பியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ரொபேர்ட் ஜுக்கம், சுற்றுச்சூழல் அமைச்சின் சார்பாக வருகை தந்திருந்த இணைப்பாளர் சாணக்க மகேனி, பறவைகள் சரணாலயம் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் , மன்னார் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் றோய் பீரிஸ், மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, வனவளத் திணைக்களம் மற்றும் பறவைகள் சரணாலய திணைக்களத்தின் அதிகாரிகள் யு.என்.டி.பி அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் பரிதாபக் கொலை

மாலபே, கெக்கிரிஹேன, தலங்கம பிரதேசத்தில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் பலத்த காயங்களுக்குள்ளான நபர் கொஸ்வத்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், சந்தேகநபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

மாலபே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரண அறிவித்தல்

## ஜெகசோதிமலர் சடாட்சரம்



யாழ் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் பிரான்ஸ் **NeuillySurMarne** ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட ஜெகசோதிமலர் சடாட்சரம் அவர்கள் கடந்த 21.01.2022 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசதுரை சடாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சற்குணசோதிமலர் மற்றும் அற்புத சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும். இந்துராணி (பிரான்ஸ்), கலாலோஜினி (கனடா) , புவிச்சந்திரன் (உரிமையாளர் வினோ நகைப் பூங்கா - யாழ்ப்பாணம்), புலேந்திரன் -Eyam Mult Express சுவிஸ்), சதீஸ்வரன் (பிரதிப்பணிப்பாளர் விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), பிரதாபன் (**Franprix - France**), மதனரூபன் (**Paris Corner/ Sadasothy Private Ltd- London**), ஜசிந்தலோஜினி (கண்டி) ஆகியோரின் அருமைத் தாயாரும், நித்தியானந்தன், சரவணபவன், வித்தியா, ஜெயகௌரி, சுகன்யா, துஷியந்தினி, தயானந்தி, சுதாகரன், ஜோதிமுருகன், ஸ்ரீகந்தராசா, சுஜிதா, இந்திகா ஆகியோரின் அன்பு மாமியாரும். சுயேன், அனித்திகா, விநோத், பிரியங்கா, பிரியன், சன்ஜித், சுவஸ்திகா. பிருதுவி, பிரவின்ஜா, பர்விஜன், பிறினவ்யா, இந்துயா, அதிகன், மாலதி, நிதுசிகா, விதுரன், சத்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2022) புதன்கிழமை பிரான்ஸ் நேரப்படி 9.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**21/1, கருவப்புலம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**ச.புவிச்சந்திரன் - 077 3816 850**
**ச.சதீஸ்வரன் - 077 603 4656**
**ச.மகிந்தன் - 077 603 4331**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வரலாற்று தவறு இழையாதீர்!

நீண்ட காலமாக பெரும் இழுபறியாகத் தொடரும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை இப்போது மேலும் மோசமான கட்டத்தை தொட்டு நிற்கின்றது.

இந்தச் சமயத்தில் தமிழ் தலைமைகள் உணர்ச்சிப் பெருக்கோடும், கொள்கை – கோட்பாட்டு ரீதியில் மட்டும் அணுகியும், விடயங்களைக் கையாளக் கூடாது. யதார்த்த பூர்வமாகச் சிந்தித்து, களநிலைவரங்களை கணக்கில் எடுத்து, காய்களை நகர்த்த வேண்டும் என்று இதற்கு முந்திய இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தோம்.

அகப் பலத்தை இழந்திருக்கின்றோம். சர்வதேச ஆதரவு ஒன்றுதான் இன்று தமிழருக்கு இருக்கும் ஒரே புறப்பலம். அந்த சர்வதேச ஆதரவு என்ற தளத்திலே பிரதானமானதாகவும், தீர்மானிக்கும் தரப்பாகவும் இருப்பது அயல் தேசமான இந்தியாதான் என்பதையும் சுட்டிக் காட்டி இருந்தோம்.

இலங்கையின் தமிழ் மக்களுக்கும், தமிழகத் தமிழ் மக்களுக்கும் இடையிலான தொப்புள் கொடி உறவுதான் இன்று இந்தியாவை நம் வசப்படுத்தும் பிரதான இழை. அதைப் பத்திரமாகவும் தந்திரமாகவும் நாம் கையாள வேண்டும்.

இந்தியாவுடன் முரண்பட்டு நின்றுகொண்டு சர்வதேச ஆதரவு தளத்தை எமது பக்கம் திருப்பலாம் என்று கனவு காண்பது அர்த்தமேயற்றது.

வெறும் கை முழம் போட்டுப் பயனில்லை. அது போல காரிய சாத்தியமற்ற கொள்கைக் கோட்பாடுகள் பயன் தரப் போவதில்லை. பயன்தராத அந்தக் கொள்கைக் கோட்பாடுகள் பல சமயங்களிலும் வினையை விலைக்கு வாங்கி தந்து விடுவனவாகவும் அமைந்து விடுவதுண்டு.

இன்றைய நிலையில் தமிழர் தரப்பில் சில சக்திகள் இந்தியாவுடன் முறுகல் போக்கைத் தேடி, வரிந்து, வலிந்து, பின்பற்றி நிற்பது தமிழ் மக்களை ஏதிலிகளாக மட்டுமல்ல, எந்த ஆதரவுத் தளமும் இல்லாமல் நடுவீதியில் நிறுத்திவிடும்.

முக்கியமாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் 'அவலை நினைத்து கொண்டு உரலை இடிக்கும்' வேலை பண்ணுவது கடைசியாக ஒட்டு மொத்தத் தமிழ் மக்களையும்தான் அதிகம் பாதிக்கச் செய்யப் போகின்றது.

தமிழ்த் தேசிய பரப்பில் நிற்கும் கட்சிகள், அமைப்புகள், இயக்கங்கள் பலவும் இன்றைய நிலையில் இந்திய ஆதரவைத்தான் பற்றி நிற்கின்றன, தமிழர் தரப்புக்கு ஏதேனும் பெற்றுக் கொடுப்பதற்கு அதுதான் ஒரே மார்க்கம் என்று கருதி அவை செயல்படுகின்றன என்பதெல்லாம் உண்மைதான். அப்படி நிற்கும் தமிழ் தேசிய கட்சிகளினின்றும் மாறுபட்ட கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அந்த ஏனைய கட்சிகளை இடித்துரைக்கிறோம் என்ற பெயரில், அக்கட்சிகள் பற்றி நிற்கும் இந்தியாவை, சுரண்டும் – நோண்டும் போக்கை முன்னெடுக்க முயல்வதாகத் தோன்றுகின்றது.

நாம் இந்தியாவை மதிக்கிறோம், உறவைப் பேண விரும்புகின்றோம் என்று வெளியில் பசப்பு வார்த்தைகளைப் பேசிக்கொண்டு, மறைவில் காலை இடற முனைவது பெரும் அரசியல் குளறுபடி.

இந்திய – இலங்கை மீனவர்கள் சர்ச்சை, தொப்புள்கொடி சகோதரர்கள் இடையேயான போராட்டம். இந்தப் பிராந்தியத்தின் வல்லரசு நாட்டின் மீனவர்கள் அத்துமீறி நடப்பதால், இலங்கைத் தமிழ் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை. இந்த உணர்வு பூர்வமான விடயத்தை மிகுந்த பொறுப்புடனும், மதிநுட்பத்துடனும் கையாள வேண்டும். 'அழுதும் அவள்தான் பிள்ளை பெற்றாக வேண்டும்' என்பதுபோல, மீனவர் பிரச்சினைக்கு நாங்கள்தான் இணக்கத் தீர்வு கண்டாக வேண்டும். அதைக் காண்பதில் – நீதியை நிலைநாட்டுவதில் – நெருக்கடி இருக்கலாம், தாமதங்கள் ஏற்படலாம். ஆனால் அதற்காக மூன்றாம் தரப்பாக ஐ.நாவை இதற்குள் இழுப்பது அல்லது சம்பந்தப்படுத்த முயல்வது இந்தியாவுக்கு நாமாக தேடிப் போய் சவால் விடும் வேலையாகி விடும். இலங்கை – இந்திய மீனவர் முரண்பாட்டை வைத்து, இலங்கை தமிழர்களுக்கான இந்திய ஆதரவுத் தளத்தைத் தகர்க்க வைக்கும் சிங்களத்தின் சதி முயற்சி கனகச்சிதமாக கட்டவிழ்கின்றது. அதற்கு தெரிந்தோ தெரியாமலேயோ – விரும்பியோ விரும்பாமலேயோ – துணை போய், வரலாற்றுத் தவறு இழைக்காதீர்கள் என்று சம்பந்தப்பட்ட தமிழர் தரப்புகளை வேண்டுவது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

## நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கி மீண்டும் செயலிழப்பு!



நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கி மீண்டும் செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எனினும், மின்சார விநியோகத் தடையை ஏற்படுத்த அனுமதிக்கப்படமாட்டாதென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## வவுனியாவில் மோட்டார் சைக்கிள் திருட்டு பொலிஸாரின் அதிரடியால் மீளக் கிடைத்தது!

வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று காணாமல்போன நிலையில், முறைப்பாடு கிடைத்து இரண்டு மணி நேரத்தில் பொலிஸார் அதிரடியாக செயற்பட்டு சந்தேக நபரை கைது செய்து மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா வைத்தியசாலைக்கு காலையில் சிகிச்சைக்காக வந்த நபரொருவர் தனது மோட்டார் சைக்கிளை வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்திவிட்டு வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணிக்கு மீண்டும் வந்து பார்த்த போது மோட்டார் சைக்கிளை காணவில்லை. இதனையடுத்து தனது மோட்டார் சைக்கிளை பல பகுதிகளிலும் தேடிய பின் மாலை 3.30 மணியளவில் வவுனியா பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவுக்குச் சென்று மாலை 4 மணியளவில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி ஆலோசனைக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜெயான் ரணவீர தலைமையில், பொலிஸ் சார்ஜன்ட் திஸாநாயக்கா, பொலிஸ் கான்டபிள் தயாளன் ஆகியோர் துரித விசாரணை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த விசாரணைகளின் அடிப்படையில் வவுனியா வைத்தியசாலையில் காவலாளியாகக் கடமை புரிந்த புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையுடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் காணாமல்போன மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் விசாரணையின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

## மாணவர்கள் சுற்றுச்சூழலின் மீது அக்கறை கொள்வது தேசியத்துக்கான அதிசிறந்த பங்களிப்பாக அமையும்



தேசியம் என்பது இன்று அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே உரித்தான ஒரு விடயம் போல ஆகிவிட்டது. அது மக்களுக்கானது. அது ஒரு இனத்தின் தனித்துவமான மொழி, உணவு, உடை, வாழிடம் என்று பலவற்றையும் உள்ளடக்கிய ஒரு வாழ்வியல் முறைமையாகும். மொழி, உணவு, உடை, வாழிடம் என்று எல்லாமே அவை சார்ந்துள்ள இயற்கைச் சூழலாலேயே தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இயற்கைச் சூழல்பாதிக்கப்படும் போது இவையாவுமே பாதிக்கப்பட்டுக் கடைசியில் தேசியமே கேள்விக்கு உள்ளாகிறது. அந்தவகையில், மாணவர்கள் இயற்கையோடு இசைந்து வாழ்வதும் சுற்றுச்சூழலின் மீது அக்கறை கொள்வதும் தேசியத்துக்கான அவர்களின் அதிசிறந்த பங்களிப்பாக அமையும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலை வர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (30.01.2022) யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார். அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் –

உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள பெரும் சவால்களாகக் கொரோனாப் பெருங்கொள்ளை நோயும், காலநிலை மாற்றமும் உள்ளன. இரண்டும் மனுக்குலத்துக்குப் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இரண்டும் இயற்கையை நாம் அழித்ததால் ஏற்பட்டுள்ள விளைவுகளேயாகும். இதனை, இயற்கையை நாம் அழித்ததால் இயற்கை எமக்கு வழங்கிய தண்டனைகளாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கொரோனா சீனாவின் தயாரிப்பா, இல்லையா என்பது விவாதத்துக்கு உரியது. ஆனால், இந்நோய் காட்டு விலங்குகளில் உறையும் வைரசுக்கள் விகாரம் பெற்று மனிதர்களுக்குத் தாவியதால் ஏற்பட்டுள்ளது என்பதே அறிவியல். அந்த வகையில், காடுகளில் இருக்க வேண்டிய விலங்குகளை, இயற்கையையும் மீறி நாட்டுச் சந்தைக்குள் கொண்டுவந்ததன் விளைவே இன்று முழு உலகத்தையும் முகக்கவசம் மாட்ட வைத்திருக்கிறது.

நாம் எரிபொருள்களை எரித்து வளியில் குவித்துக் கொண்டிருக்கும் கரிக்காற்றே பூமியைச் சூடுபோட்டு வருகிறது. பூமி வெப்பம் அடைவதால் துருவப் பகுதிகளில் உள்ள பனிமலைகள் உருகி வழிகின்றன. இதனால், இவற்றுக்கு கீழே உறங்கு நிலையிலுள்ள, மனி தன் தோன்ற முன்னரே தோற்றம் பெற்ற வைரசுக்கள் வெளிக்கிளம்பும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவை பரவ ஆரம்பித்தால் அது கொரோனாவைவிடப் பன்மடங்கு கொடிய நோய்களை ஏற்படுத்துவதாக அமையும்.

கொரோனா என்ற கொள்ளை நோயாகவும், கால நிலை மாற்றங்களாகவும் இயற்கை விடுத்திருக்கும் எச்சரிக்கைகளைப் புறந்தள்ளாது, நாங்கள் அனைவருமே இயற்கையுடன் ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகவே செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். இதில் மாணவர்களே பெரும்பங்காற்ற முடியும். அதனாலேயே மாணவர்களுக்குச் சூழற்கல்வி, சூழல் விழிப்புணர்வு, சூழல்பாதுகாப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்குடன் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.




# மக்களுக்கும் இயற்கைக்குமான ஈரநிலங்கள்

கலாநிதி திருமதி.
சுபாஜினி உதயராசா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.




## அறிமுகம்

உலகெங்கிலும் உள்ள ஈரமான புல்வெளிகள், ஆறுகள், கழிமுகங்கள், கழிமுக கடலோர குடியிருப்புப் பகுதிகள், பவளத்திட்டுக்கள், தாழ்வான நிலங்கள், குளம், குட்டைகள், ஏரிகள், மீன்குளங்கள், நீர்த்தேக்கங்கள், நெல்வயல்கள், சதுப்பு நிலங்கள், சதுப்புநிலக் காடுகள் உள்ளிட்ட அனைத்தும் ஈரநிலங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இயற்கையான சூழலில் அமைந்துள்ள, வருடம் முழுவதும் நீரினால் மூழ்கியுள்ள பிரதேசம் அல்லது காலத்திற்குக் காலம் நீரினால் மூழ்கும் பிரதேசங்கள் 'ஈரநிலங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவை புவிமேற்பரப்பில் பல்வேறுபட்ட அங்கிகளுக்கு ஆதாரமாக விளங்குவதோடு இயற்கைச் சமநிலையைப் பேணும் ஒரு களமாகவும் தொழிற்படுகின்றன. ஈரநிலங்களே உலகில் மிக உற்பத்தித்திறன் கூடிய உயிர்ச் சூழலியல் முறைமையாகக் (Ecosystems) கருதப்படுகின்றது. ஈரநிலங்களை 'நிலக்காட்சிகளின் சிறுநீரகங்கள்' (The kidneys of the landscape) எனவும், நீரியல் மற்றும் இரசாயனவியல் சுழற்சிகளில் அவை செயற்படும் முறை காரணமாக அவற்றை ஆதாரமாகக் கொண்டிருக்கும் உணவு இணையங்கள் / வலைகள் (Food webs) மற்றும் வளமான உயிரியல் வேறுபாடுகளின் காரணமாக அவை 'உயிரியல் ரீதியிலான பல்பொருள் அங்காடிகள்' (Biologial Super markets) எனவும் அழைக்கப்படுகின்றன ( Navahungu N.L.& Visser.S.M 2011). சிறப்பாக சதுப்பு நிலங்கள், நீர்ப்பாதைகள், ஏரிகள், களப்புக்கள், கழிமுகங்கள் கடற்கரைசார் சதுப்பு நிலங்கள், உள்ளக நீர்த்தேக்கங்கள் ஆற்று வாய்ப்பகுதி என்பன ஈரநிலங்களுக்கு உரிய பகுதிகளாகும்.

## உலக ஈரநில தினம்

ஈரநிலங்களின் அழிவைத் தடுப்பதற்காகவும், இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்காகவும் 'ரம்சார் அமைப்பு' என்ற சர்வதேச அமைப்பு செயற்பட்டு வருகின்றது. 161 நாடுகள் இந்த ரம்சார் அமைப்பில் அங்கத்தினராக உள்ளன. ஈரான் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றான 'ரம்சார்' நகரில் 1971 ஆம் ஆண்டு ஒரு சர்வதேச உடன்பாடு எட்டப்பட்டது. அதுதான் 'ஈரநில உடன்படிக்கை' ஆகும். பூமியின் மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமாக உள்ள ஈரநிலங்களைப் பாதுகாத்துக் கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையே 'ரம்சார் உடன்படிக்கை' என்று பிரபல்யம் பெற்றுள்ளது. 1971 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கை சர்வதேச பிரஜைகளின் கவனத்தை ஈர்க்க 1997ஆம் ஆண்டு அதனை 'உலக ஈரநிலதினம்' என பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 2ஆம் திகதியில் உலக ஈரநில தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. உலகம் முழுவதும் உள்ள ஈரநிலங்களை ஆராய்ந்த இந்த அமைப்பு அவற்றில் சிறப்பானவை என 1950 ஈரநிலங்களை பட்டியலிட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஆய்வுப்பொருளை



அடிப்படையாகக் கொண்டு உலக ஈரநில தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தவகையில் 2022 ஆம் ஆண்டினுடைய உலக ஈரநில தினத்தின் சர்வதேச ஆய்வுப் பொருள் மக்கள் மற்றும் இயற்கைக்கான ஈரநிலங்களின் செயற்பாடு (Wetlands Action for People and Nature - https://www.unep.org/events/un-day/world-wetlands-day-2022) என்பதாகும். 2021ஆம் ஆண்டு ஆவணி 30ஆம் திகதி பொதுச் சபையால் இத்தினக் கொண்டாட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 2ஆம் திகதி பெப்ரவரி 2022ஐ ஐக்கிய நாடுகளின் சர்வதேச நாளாகக் கடைப்பிடிக்கப்படும் முதல் ஆண்டு இதுவாகும்.

## ஈரநிலங்களின் முக்கியத்துவம்

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இப்பிரதேசங்கள் இருப்பிடமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும் வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்று குறைவடையும் போது அதற்கு ஈடு கொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும், களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈரூடகவாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியனவாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஈர நிலங்கள் மனிதனுக்கு பல்வேறு வழிகளில் பயன்பட்டு வருகின்றன. இவை சில வேளைகளில் மனிதனுக்கு நேரடியாக பயன்பட்டு வருகின்ற அதேவேளை மறைமுகமாகவும் சில சமயங்களில் பயன்பட்டு வருகின்றன. பொதுவாக ஈரநிலங்களின் பயன்பாட்டினை இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம்.

1. பொருளாதார முக்கியத்துவம்.
2. சமூக,கலாசார முக்கியத்துவம்.

பொருளாதார முக்கியத்துவம் என்பதனுள் மீன்பிடி, நீர்மின் உற்பத்திகள், போக்குவரத்து, கைத்தொழில் விருத்தி, விவசாயம் போன்றன உள்ளடங்குகின்றன.

மீன்பிடியை எடுத்து நோக்கும் போது உலகளாவிய ரீதியில் இன்று சிறந்ததொரு பொருளாதார நடவடிக்கஷ்யாக காணப்படுகின்றது. இது ஆரம்ப காலங்களிலிருந்தே மனிதனோடு மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. ஈரநில்களில் 75 வீதமான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதில் 80 தொடக்கம் 90 வீதமான மீன்கள் மீள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் 75 வீதமான பொருளாதார நடவடிக்கைகள் இந்த ஈரநிலங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு ஈரநிலங்களானவை மக்ககளிடையே நிலவும் உணவுத் தேவையை நிறைவேற்றுவதுடன் வேலைவாய்ப்புக்களையும் விஸ்தரித்து பொருளாதாரத்தையும் வளர்ச்சியடைய வைக்கிறது.

நீர்மின் உற்பத்தியும் ஈரநிலங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் ஒரு பொருளாதார நன்மையாகும். இன்று உலகளாவிய ரீதியில் காணப்படும் ஒரு முக்கிய பிரச்சினை போதியளவு நீர் மின்சாரம் இன்மையாகும். இன்று அநேகமான இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஓர் இடமாக ஈரநிலங்கள் காணப்படுகின்றது. அதாவது மின் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருளான நீரை வழங்குகின்றது. பின்பு இந்நீரானது நீர்மின் உற்பத்தி நிலையங்களில் சுத்திகரிக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான மின்சாரமாக வழங்கப்படுகின்றது. குறிப்பாக இலங்கையில் விக்டோரியா, லக்சபானா போன்ற இடங்களில் இவ்வாறான நீர்மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. நீர்மின் உற்பத்தியால் எரிபொருள் பற்றாக்குறை தீர்க்கப்படுவதோடு சூழலும் மாசடையாது பாதுகாக்கப்படுகின்றது.

ஈரநிலங்களாவன பல்வேறு வகையான கைத்தொழில்களையும் விருத்தி செய்கின்றன. அதாவது கைத்தொழில்களுக்கு தேவையான மூலப்பொருள்களை விருத்தி செய்கின்றது. அதாவது கைத்தொழில்களுக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குகின்றது. இதன் மூலம் சுண்ணாம்புக் கைத்தொழில், உப்புக் கைத்தொழில், சீமெந்துக் கைத்தொழில், கட்டடப்பொருள்களுக்கான கைத்தொழில், மீன்பிடிக் கைத்தொழில், இரசாயனக் கைத்தொழில் போன்றவற்றை விருத்தி செய்கின்றது. இதன் மூலம் கைத்தொழிற்சாலைகளும் மேம்படுத்தப்படுகின்றன. குறிப்பாக ஆனையிறவு, புத்தளம், அம்பாந்தோட்டை போன்ற உப்பளக் கைத்தொழில் நிலையங்களையும், காங்கேசன்துறை போன்ற சீமெந்துக் கைத்தொழில் நிலையங்களையும் கூறலாம்.

விவசாயத்திற்கு நீர் இன்றியமையாத ஒரு வளமாகும். இன்று அநேகமான குறைவாக விருத்தி அடைந்த நாடுகளில் விவசாயத்திற்கான போதியளவு நீர் கிடைப்பதில்லை. இப்பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு ஈரநிலங்கள் விவசாயத்திற்கான நீரை வழங்கி விவசாயத்துறையை ஊக்குவிக்கின்றது. இதன் மூலம் மக்களின் சுயதேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு பொருளாதாரத்திலும் தன்னிறைவு ஏற்படுகின்றது. உதாரணமாக இலங்கை, இந்தியா உட்பட்ட ஆசிய நாடுகளில் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது.

ஈரநிலங்களின் சமூக, கலாசார முக்கியத்ததுவம் என்னும் போது இவை மக்களிடையே அழகியற் தன்மையை ஏற்படுத்துவதோடு சுற்றுலா பயணம், ஆய்வு நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றையும் விருத்தி செய்கின்றன. மேலும் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை இலகுவாக்குவதோடு மாணவர்களின் இயற்கையோடு இணைந்த கல்வி முறைமைகளையும் தோற்றுவிக்கின்றது எனலாம். அது மட்டுமன்றி பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை ஈரநிலங்கள் ஆய்வு நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டுவருகின்றது. அத்துடன் உல்லாசப்பயணிகளின் வருகையினை அதிகரிக்கின்ற ஓர் இடமாகவும் ஈரநிலங்கள் விளங்குகின்றன. இவற்றோடு ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஒரு மீன்பிடிக்கும் இடமாகவும் திகழ்கின்றது. இதன் மூலம் ஆண், பெண் சமத்துவத்தினையும் ஈரநிலங்கள் பேணுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றினைத் தவிர ஈரநிலங்கள் மறைமுகமான ரீதியிலும் தமது பங்களிப்பினை புவிக்கு வழங்கி வருகின்றன. அந்த வகையில்,

* உயிரின பல்வகைமையை பேணுதல்
* நீரியல் வட்ட சமநிலையினை பேணுதல்
* காலநிலை மாற்றம், இயற்கைச் சமநிலை என்பவற்றைப் பேணுதல்.
* இயற்கை அனர்த்தங்களை தடுத்தல்.
* கிணற்று நீர் மாசடைவைத் தடுத்தல்.

ஆகியவற்றைச் செய்கின்றது.

ஈரநிலங்கள் தமது அங்கிகளுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதோடு அவற்றின் செயற்பாடுகளையும் விருத்தி செய்து பேணுகின்றது. இதன் மூலம் அங்கிகளின் பல் இனத்தன்மை அதிகரிக்கப்பட்டு அங்கிகளுக்கு இடையே இயற்கைச் சமநிலை பேணப்பட்டு உயிர் பல்வகைமை பாதுகாக்கப்படுகின்றது. இதே போன்று நீரியல் வட்டத்திலும் பங்களிப்பு செய்கின்றது. ஆவியாக்கம், படிவுவீழ்ச்சி இவை இரண்டையும் சமனிலையில் வைத்திருக்கும் இடமாகவும் விளங்குகின்றது. இதன் மூலம் நீரியல் வட்டம் சீரான சமநிலைத் தன்மையில் இயங்குவதோடு அங்கிகளுக்கு இடையே ஓர் இயற்கைச் சமனிலையையும் பேணுகின்றது. இதன் காரணமாக காலநிலை மாற்றங்களான அதிக வெப்பநிலை, அதிக படிவுவீழ்ச்சி, உயர்ந்த வளிமண்டல அமுக்கம் மற்றும் வெள்ளப் பெருக்கு, வரட்சி போன்ற காலநிலையில் ஏற்படும் மாற்றங்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்துகின்றது.

(06ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களுக்கும் .....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)


குறிப்பாக ஈரநிலங்கள் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்தி வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துகின்றன. அத்துடன் கரையோர சதுப்பு நிலங்களின் ஊடாக தரைக்கீழ் நீர் ஓடுவதன் மூலம் உவர் நீர் ஊடுருவுவதை தடை செய்கின்றது. இதன் காரணமாக கிணற்று நீர் மாசடைவது தடுக்கப்படுகின்றது.

மேலும் நீரைச் சேமித்து வைத்து சுத்திகரிக்கும் தனித்தன்மையான சூழலியல் சேவைகளைச் செய்தல் அலைச் செயற்பாடுகள் புயல் போன்றவற்றின் தாக்கத்தை கண்டல் தாவரங்கள் மூலம் தடுத்தல் அதாவது இவை தமது வேர்களின் மூலம் வண்டலை இறுக பற்றிப் பிடிப்பதனால் அலை மற்றும் புயல் தாக்கத்தை குறைப்பதுடன் நீர் நிலைகளை அடையக்கூடிய நச்சுப் பொருட்களை தடுப்பதன் மூலம் நீர் மாசடைவதை தடுக்கின்றன.

## உயிர்ப்பல்வகைமை நிறைந்த ஈரநிலங்கள்

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காணமுடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இப்பிரதேசங்கள் இருப்பிடமான இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும், வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்று குறைவடையும் போது அதற்கு ஈடுகொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும், களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப் பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈரூடக வாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியவையாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன. ஈரநிலங்கள் தமது அங்கிகளுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதோடு அவற்றின் செயற்பாடுகளையும் விருத்தி செய்து பேணுகின்றன. இதன் மூலம் அங்கிகளின் பல் இனத்தன்மை அதிகரிக்கப்பட்டு அங்கிகளுக்கு இடையே இயற்கைச் சமனிலை பேணப்பட்டு உயிர்பல்வகைமை பாதுகாக்கப்படுகின்றது. இதே போன்று நீரியல் வட்டத்திலும் பங்களிப்பு செய்கின்றன. ஆவியாக்கம், படிவுவீழ்ச்சி இவை இரண்டையும் சமனிலையில் வைத்திருக்கும் இடமாகவும் இவை விளங்குகின்றன. இதன் மூலம் நீரியல் வட்டம் சீரான சமனிலைத் தன்மையில் இயங்குவதோடு அங்கிகளுக்கு இடையே ஓர் இயற்கை சமனிலையையும் பேணுகின்றது. இதன் காரணமாக காலநிலை மாற்றங்களான அதிக வெப்பநிலை, அதிக படிவு வீழ்ச்சி, உயர்ந்த வளிமண்டல அமுக்கம், மற்றும் வெள்ளப்பெருக்கு, வரட்சி போன்ற காலநிலையில் ஏற்படும் மாற்றங்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்துகின்றன. குறிப்பாக ஈரநிலங்கள் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்தி வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துகின்றன. அத்துடன் கரையோர சதுப்பு நிலங்களின் ஊடாக தரைக்கீழ்நீர் ஓடுவதன் மூலம் உவர்நீர் ஊடுருவுவதை தடை செய்கின்றது. இதன் காரணமாக கிணற்று நீர் மாசடைவது தடுக்கப்படுகின்றது.



மேலும் நீரைச் சேமித்து வைத்து சுத்திகரிக்கும் தனித்தன்மையான சூழலியல் சேவைகளைச் செய்தல், அலைச் செயற்பாடுகள், புயல் போன்றவற்றின் தாக்கத்தை கண்டல் தாவரங்கள் மூலம் தடுத்தல் அதாவது இவை வேர்களின் மூலம் வண்டலை இறுக பற்றிப் பிடிப்பதனால் அலை மற்றும் புயல் தாக்கத்தை குறைப்பதுடன் நீர் நிலைகளை அடையக்கூடிய நச்சுப் பொருள்களை தடுப்பதன் மூலம் நீர் மாசடைவதை தடுக்கின்றன. இவ்வாறான சேவைகளை மக்கள் மத்தியில் வழங்கி ஈரநிலங்கள் வெறுமையான நிலங்கள் அல்ல அவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றன.

## இலங்கையில் ஈரநிலங்கள்

இலங்கையில் பலதரப்பட்ட ஈரநிலங்களைக் காணமுடியும். இவற்றுள் 'ரம்சார் ஈரநிலங்கள்' என்று பெயரிடப்பட்ட ஈரநிலங்களும் உள்ளடங்குகின்றன. நமது நாட்டில் ஈரநிலங்களைப் பிரதானமாக இயற்கை ஈரநிலம், செயற்கை ஈரநிலம் என இரண்டாக வகுக்கலாம். இவ்விரண்டையும் நன்னீர் ஈரநிலம், உவர்நீர் ஈரநிலம், சவர் நீர் ஈர நிலம் என்று மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரித்தறிய முடியும். 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையில் இலங்கையில் ஆறு ஈரநிலங்கள் ரம்சார் ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவை,

* பூந்தல தேசியவனம்
* ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி (சரணாலயம்)
* மாதுகங்கை
* குமண குடும்பிகல சரணாலயம்
* வங்காலை சரணாலயம்
* வில்பத்து சரணாலயம் என்பனவாகும்.

ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது தேசியவனமாக பூந்தல தேசிய வனவியில் பூங்கா கருதப்படுகின்றது. அதாவது 1993 ஜனவரி 4 ம் திகதி இந்த வனப்பகுதி தேசிய வனவிலங்கியல் பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது 6216 ஹெக்ரேயர் பரப்பினைக் கொண்டுள்ளது. இங்கு அழகிய ஏரிகள் மற்றும் களப்புக்கள் என்பன அமைந்துள்ளன. பூந்தல களப்பு, எம்பிலிகல களப்பு, மஹாயேவாய மற்றும் கொஹொலங்கல களப்பு என்பன இவற்றுள் பிரதானமானவையாகும். இது ஈரநிலமாக மட்டுமன்றி பறவைகளின் சொர்க்கபுரியாகவும் பிரசித்தி பெற்றுள்ள இப்பகுதியில் உயிர்பல்வகைமைத் தன்மை மிகவும் அதிகமாக உள்ளது. பூந்தல வனப்பகுதியை தமது வாசஸ்தலமாக்கிக் கொண்ட உயிரினங்களில் இலங்கைக்கேயுரிய 11 பறவையினங்கள், 15 ஈரூடகவாழிகள், 48 ஊர்ந்து செல்லும் உயிரினங்கள், 197 பறவைகள், 52 பாலூட்டி இனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பருவகாலங்களுக்கு ஏற்ப வெளிநாட்டுப்பறவைகளும் இங்கு வருகின்றன.

பதினேழு தீவுகளைக் கொண்ட கண்டல் தாவரங்களால் சூழப்பட்ட மாதுகங்கை ஈரநிலமானது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி சர்வதேச ரம்சார் ஈரநிலப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது 915 ஹெக்ரேயர் பரப்பினைக் கொண்டுள்ளது. இலங்கையில் அசுத்தமடையாத கண்டல் தாவரங்கள் உள்ள பகுதியாக இப்பகுதியைக் கருதமுடியும் 95 தாவர இனத்திற்குரிய 303 உப இனங்களும், 248 உயிரினங்களும் மாதுகங்கைப் பகுதியில் உள்ளன. இவைதவிர முதலைகள், மீன் இனங்கள், பறவைகள், பாலூட்டி இனங்கள் பலவும் இப்பகுதியில் உள்ளன. சூழலியலாளர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்த இடமாக மாதுகங்கை ஈரநிலம் திகழ்கின்றது.

2001ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3ம் திகதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக ஆனவிழுந்தாவ ஈர நிலம் பிரகடனப்படுத்தப்பட்டது. 1397 ஹெக்ரேயர் பரப்பளவை இது உள்ளடக்கியுள்ளது. இது பலவாவிகளை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும். இலங்கையில் உள்ள நன்னீர் மீன் இனங்களில் 50 சதவீதமானவை ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதியில் வசிக்கின்றன. இதனைத்தவிர 22 நீரியல் தாவரங்கள், 264 வகையான பிறதாவரங்கள், மருத்துவ நலன்மிக்க தாவரங்கள், இலங்கைக்கே தனித்துவமான தாவரங்கள் போன்றனவும் இங்கு காணப்படுகின்றன.

2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29ம் திகதி குமண – குடும்பிகல சரணாலயம் ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 200 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட இந்த வனப்பகுதியானது இயற்கையான சதுப்பு நிலங்கையும் கண்டல் காடுகளையும் மேலும் சில விசேட தாவர வகைகளையும் கொண்டதாக விளங்குகின்றது. யால தேசியவனத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள இந்த வனப்பகுதி பறவைகள் சரணாலயமாகவும் பிரசித்தி பெற்றுள்ளது. இலங்கை யில் வசிக்கும் 50 சதவிதமான பறவைகளை இங்கு காணமுடியும். இதனைத்தவிர 30 வகையான நீர்வாழ் சுற்றுலாப் பறவைகள் இந்த சரணாலயத்திற்கு வருகை தருகின்றன. மே, யூன் மாதங்களில் நீர்வாழ் பறவைகளின் கூடுகளை பெருமளவில் இங்கு காணமுடியும். அத்துடன் 11 வகையான ஊர்வனவற்றையும் காணமுடியும் இவற்றுள் ஆமைகள் முக்கியமானவை.

முட்புதர்கள் கொண்ட அடர்த்த காடுகள், கடற்புல் வெளிகள், களப்புகள், கண்டல் காடுகள், உவர்நீர் சதுப்பு நிலங்கள், ஆழமற்ற கடல் பகுதி, மணல் குன்றுகள் ஆகிய சூழல் தொகுதிகளைக் கொண்ட வங்காலை சாரணாலயம் (மன்னார்) 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 12ம் திகதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த சரணாலயமானது 4839 ஹெக்ரேயர் பரப்பளவைக் கொண்டுள்ளது. சரணாலயத்தின் கடல் மற்றும் கடற்கரை சார்ந்த சுற்றாடல் தொகுதிகளில் 60 வகையான மீன் இனங்கள், கடல் ஆமைகள், டுகான் பறவைகள் போன்ற அரிய வகை உயிரினங்களையும் காணமுடியும். இப்பகுதி தொல்லியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும்.

1938 இல் வில்பத்து மிகவும் பெரிய சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டாலும் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ம் திகதியே சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது 131, 693 ஹெக்ரேயர் பரப்பளவை உள்ளடக்கி யுள்ளது. இங்கு உலர்வலயத்திற்குரிய சுற்றாடல் இயல் புகளையே காணமுடியும். யானை, சிறுத்தை, கரடி போன்ற விலங்குகள் இங்கு வகிக்கின்றன. இந்த ஈரநிலத்தைச் சூழவும் பூக்காத தாவரங்கள் பலவற்றைக் காணமுடியும்.

## ஈரநிலங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

உலக மக்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்துவரும் ஈரநிலங்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றன. குறிப்பாக உலகில் அதிகரித்துவரும் சனத்தொகை காரணமாக ஈரநிலங்கள் சம அளவிலும், பரம்பலிலும் பல்வேறு மாற்றங்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றன. இதன் காரணமாக ஈரநிலங்கள் தற்போது அழிவடைந்து கொண்டும், மாசடைதலுக்கு உட்பட்டும் வருகின்றன. மிதமிஞ்சிய நீர்ப்பாவனை, நீரின் தரத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக உவர்த்தன்மை அதிகரிப்பு, அளவிற்கு அதிகமான மீன்பிடி, பொருத்தமற்ற மீன்படி முறைகள், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிலம் நிரப்பப்படுத்தல், முருகைக்கற்பார் அகழ்தல், சிப்பி அகழ்தல், மண் அகழ்தல், விவசாயத்திற்கு மிதமிஞ்சி உரமிடல், நகர சபைக்கழிவுகள், கைத்தொழிற்சாலைக் கழிவுகள், திட்டமிடப் படாத நிலப்பயன்பாடுகள் போன்ற செயற்பாடுகளினால் ஈரநிலங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

## ஈரநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தவிர்ப்போம்.

இயற்கையின் சமநிலையைப் பாதுகாப்பதற்கு ஈரநிலங்களைப் பாதுகாப்பது அவசியமாகும். ஈரநிலங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் ஊடாக அவற்றை பாதுகாக்க முடியும். இரசாயனப் பசளைகளைக் குறைவாகப் பயன்படுத்துதல், திட்டமிட்ட வகையில், நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல், நீர்மூலங்களில் கழிவுகளைக் கொட்டுவதனைத் தவிர்த்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினூடாக ஈரநிலங்களைப் பாதுகாக்க முடியும். அத்துடன் ஈரநிலங்களின் முக்கியத்துவம் பற்றி மக்களிடையே எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முருகைக்கல் அகழ்தல் மற்றும் கண்டல் தாவர அழிப்பு போன்றவற்றை தடைசெய்தல், பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்;டத்திலும் ஈரநிலங்கள் தொடர்பான கருத்தரங்குகள், விவாதங்களை நடாத்துதல், ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கென அரசாங்கம் மானிய உதவிகளை வழங்குதல், கரையோர மணல் அகழ்வு நடவடிக்கைகளை தடைசெய்தல் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளினாலும் ஈரநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கலாம் அல்லது தவிர்க்கலாம். இவற்றைத் தவிர இன்று ஈரநிலங்களைப் பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச நாடுகளில் உச்சி மகாநாடுகளும் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக ரம்சார் (சுயஅணயச) உடன்படிக்கையைச் குறிப்பிடலாம்.

இவ்வாறாக ஈரநிலங்கள் இயற்கை அங்கிகளின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவதோடு, உயிர்பல்வகைமையினை பாதுகாக்கும் பெட்டகங்களாகவும் தொழிற்படுகின்றன. மனித வாழ்க்கையோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு வழிகளில் தொடர்புபட்டுள்ள இவ் ஈரநிலங்களை அழிந்து போகாது பாதுகாத்தல் நம் அனைவரினதும் கடமையாகும். நம் எதிர்கால பாதுகாப்பை மனதில் கொண்டு இதனைச் செய்ய வேண்டும் என்பதே உலக ஈரநிலதினத்தின் மூலம் உங்களுக்கு முன்வைக்கும் வேண்டுகோள் ஆகும். இதனை நிச்சயம் செய்வீர்கள் என்றால் உங்கள் மனதும் ஓர் ஈரநிலம்தான் எனக் கூறி இக்கட்டுரை நிறைவு செய்யப்படுகின்றது.

# கொவிட் தீர்வுக்கு ஒரே தீர்வு தடுப்பூசி!

தடுப்பூசிகளின் வருகையே காலத்திற்குக் காலம் எம்மைத் தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. தடுப்பூசி தான் தொற்றின் நிரந்தரத் தீர்வுக்கு ஒரே வழி என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனர்த்தங்களும் அழிவுகளும் பல நூற்றாண்டு காலமாகப் பூமியில் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. இந்த கோவிட் வைரஸ் செயற்கையாகப் பரவியது என்று பல கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள். ஆனால் வைரஸ் என்பது இயற்கையாகப் பல தடவைகள் எமது சந்ததியரின் காலங்களிலும் வந்திருக்கின்றது.

அனர்த்தங்கள் மூலமாகப் பல அழிவுகள் இடம்பெற்றிருக்கின்றன. இவ் அனர்த்தங்களால் கோடிக் கணக்கானவர்கள் இறந்தும் இருக்கின்றார்கள். நமது நாட்டிலும் நமது பிரதேசத்திலும் அவை இடம் பெற்றிருக்கின்றன.

மனிதர்களால், யுத்தங்களால், ஆயுதங்களால் அழிவுகள் நிறையவே இடம்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் பல சம்பவங்கள் உலகளாவிய தொற்றுக்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 6ம் நூற்றாண்டில் கறுப்புக் காய்ச்சல் மூலம் கோடிக்கணக்கானவர்கள் இறந்துள்ளார்கள்.

அதேபோன்றொரு சம்பவம் 13ம் நூற்றாண்டில் பிளேக் வைரஸ் மூலம் தொற்று உருவாகி அதிலும் பலர் இறந்திருக்கின்றார்கள். உலகத்தின சனத்தொகையை அரைவாசியாக ஆக்கியிருக்கின்றது.

அந்த கிருமிகளின் தொற்று. எச்.ஐ.வி, கோவிட் போன்ற பல தொற்று நோய்கள் உலகின் சனத்தொகையைக் காலத்திற்குக் காலம் குறைத்து வந்திருக்கின்றது.

அது இயற்கையின் நியதியாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் தன் கொவிட் வைரஸின் ஒரு திரிவான கொவிட் 19 ஆக உருவெடுத்துள்ளது.

இந்தக் கொவிட் – 19 இனால் இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இன்று வரை உலகத்தில் சுமார் 35 கோடி பேர் பாதிக்கப்பட்டும் 56 லட்சம் பேர் இறந்தும் இருக்கின்றார்கள்.

எமது நாட்டிலும் சுமார் ஆறு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டும் பதினாறாயிரம் பேர்வரை இறந்தும் இருக்கின்றார்கள். இன்று பிளேக், கொளொரா, போலியோ, மஞ்சள் காய்ச்சல், பெரிய அம்மை போன்ற நோய்கள் உலகத்தில் இல்லை. இவற்றுக்கெல்லாம் பிரதானமாக அமைந்தது தடுப்பூசிகள்.

இந்தத் தடுப்பூசிகளின் வருகையே காலத்திற்குக் காலம் எம்மைத் தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. தடுப்பூசிகள் புதிதாக உருவாகிய விடயங்கள் அல்ல.

அந்த வகையில் இன்று இருக்கின்ற தொற்று நிலைமைகளை நாங்கள் சில நடைமுறைகள் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றோம்.

ஒருவருக்கொருவர் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற வேண்டுமாக இருந்தால் அசைவு நிலையை நிறுத்த வேண்டும். அதன் காரணமாகத் தான் பாரிய அளவில் முடக்க நிலையை ஏற்படுத்தியிருந்தோம்.

இந்தக் கொவிட் – 19 வைரசில் அல்பா பீட்டா நிலைகள் ஏற்படுத்திய தாக்கம் மிகச் சிறிதானது. ஆனால் அதேநேரம் மக்களின் விழிப்புணர்வும் உச்சக் கட்டத்திலிருந்த காலம் அது. காலம் செல்ல செல்ல மோசமான திரிவு நிலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

டெல்டா என்பது தான் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதில் மோசமான திரிவுநிலை. அந்த நிலை வரும் போது எமக்குள் விழிப்பு நிலை இருந்தாலும் நாங்கள் சில பின்னடைவுகளைக் கண்டிருந்தோம்.

மக்களும் இந்த நோயின் நிலைமை பற்றி முழுமையாக அறிந்திருந்தாலும் உயர்நிலையினர் தொடக்கம் கீழ் நிலையினர் வரை சுகாதாரக் கட்டுப்பாடுகளை வாய்ச்சொல்லால் கூறுவதில் மாத்திரம் கவனஞ் செலுத்திக் கொண்டு செயல் வடிவில் பல இடங்களில் தளம்பல் காட்டுகின்ற நிலைதான் இன்றுவரை தொடர்கின்றது. ஆனாலும் இந்த தடுப்பூசிகளின் ஆரம்பம் அந்த நிலைமையை ஓரளவு புரட்டிப் போட்டிருக்கின்றது.

மூன்றாவது அலையினை நாங்கள் வெற்றிகரமாகத் தாண்டி வந்திருக்கின்றோம். இன்றைய நிலையில் வீரர்களாகச் சித்தரிப்பது பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களையே. இதுவும் ஒரு போர்தான்.

கண்ணுக்குத் தெரியாத உயிர் அணுக்களுடன் போராடி அந்த உயிரியல் போரில் வென்றவர்கள் அவர்கள். முன்பெல்லாம் எவ்வாறு நடந்திருந்தாலும் பரவாயில்லை இனிவரும் காலங்களில் நாங்கள் ஒவ்வொருவரும் இந்த கொவிட் – 19 நிலைமையில் சரியான கட்டுப்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்த மாவட்டம் பல விடயங்களில் முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளது. தடுப்பூசி செலுத்திக் கொள்வதில் ஆரம்பத்தில் மிக முன்னணியிலிருந்தவர்கள் நாம். ஆனால் இன்று பின்னணியில் இருக்கின்றோம். ஏனெனில் இந்த மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியைப் போடுவதற்குரிய பல பலவீனங்கள் எங்களுக்கிடையே காணப்படுகின்றது.

வளங்களைத் திரட்டுவதற்குரிய பிரச்சினை, பொது மக்களுக்கு இருக்கின்ற இளக்காரமான, அசமந்தப் போக்கு மற்றும் போலிப் பிரச்சாரங்கள் என்பனவே இந்த பூஸ்டர் தடுப்பூசி போடப்படுவதில் பின்னணியில் நிற்பதற்குக் காரணங்களாக இருக்கின்றன.

நாங்கள் விசேட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அதனை முன்கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து தான் அதனை முன்கொண்டு செல்ல வேண்டும். இதற்கு அனைவரின் ஒத்துழைப்புகளும் தேவை. ஒன்றுகூடுகின்ற விடயங்களை நாங்கள் நிச்சமாகத் தவிர்க்க வேண்டும். தேவையான ஒன்றுகூடல்களை மாத்திரம் மேற்கொண்டு தேவையற்ற ஒன்றுகூடல்களைத் தவிர்த்துவிட வேண்டும்.

அவ்வாறு ஒன்றுகூடல்கள் தேவையானதாக இருந்தால் முகக்கவசம், இடைவெளி, கைச் சுகாதாரம் என்பவற்றை நிச்சயமாகப் பின்பற்ற வேண்டும். தற்போது 12 வயதிலிருந்து 15 வரையுள்ள மாணவர்களுக்கு ஒரு பைஸர் ரக தடுப்பூசியும், 16 வயதிலிருந்து 19 வரையுள்ளவர்களுக்கு இரண்டு பைஸர் ரக தடுப்பூசியும், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், கர்ப்பிணி தாய்மாருக்கும் மூன்று தடுப்பூசிகளும் செலுத்தப்படுகின்றன.

இந்த தடுப்பூசி செயற்திட்டத்தை நாங்கள் பூரணமாக முடிக்க வேண்டும். அப்போதுதான் தற்போது வருகின்ற ஒமிக்ரோன் என்கின்ற தொற்றிலிருந்து நாங்கள் தப்பித்துக் கொள்ள முடியும்.

எந்தவொரு தொற்றும் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களுக்கும் வரும் ஆனால் அவர்களுக்கு ஆபத்தான நிலை ஏற்படப் போவதில்லை. தொண்டையுடன் அந்த தொற்று நிலை நின்றுவிடும்.

ஆனால் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களுக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டு அவர்கள் இறக்கின்ற நிலையும் உருவாகும். எனவே தடுப்பூசியை நாங்கள் நிச்சயமாக ஏற்றிக் கொள்ள வேண்டும்.

இந்த ஒமிக்ரோன் தொற்று மிக வேகமாகப் பரவி வருகின்ற தொற்று. தற்போதைய நிலையில், எமது மாவட்டத்தில் 1500 நோயாளிகள் இனங்காணப்பட்டாலும் எமது அனுமானத்தின் பிரகாரம் அது பத்து மடங்கிற்கு அதிகமாகவும் இருக்கலாம். ஏனெனில் இலைமறைகாயாக ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள் இருக்கின்றார்கள்.

அந்த விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்வதுடன், ஏனையவர்களையும் பல கட்டுப்பாடுகள் மூலம் கட்டுப்படுத்த வேண்டும். தடுப்பூசிதான் தொற்றின் நிரந்தரத் தீர்வுக்கு ஒரே வழி என தெரிவித்துள்ளார்.

## நாட்டின் பல பாகங்களில் நேற்று திடீர் மின்வெட்டு!

நாட்டின் பல பாகங்களில் நேற்று (செவ்வாய்க்கிழமை) திடீர் மின்வெட்டு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் 3 ஆவது மின்பிறப்பாக்கி கடந்த டிசெம்பர் மாதம் முதல் செயலிழந்திருந்த நிலையில், சீர்செய்யப்பட்டு, கடந்த திங்கட்கிழமை மீண்டும் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டது.

இந்த நிலையில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக குறித்த மின் பிறப்பாக்கி நேற்று மீண்டும் செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## மலையகத்தில் கடும் வறட்சி!

மலையகப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக நிலவும் வெயிலுடன் கூடிய வறட்சியான காலநிலையில் நீரேந்தும் பிரதேசங்களில் நீர் நிலைகள் வற்றியுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் காடுகளைத் தீ வைக்கும் நாசகார செயல்களும் இடம்பெற்று வருகின்றன. வறட்சியான காலநிலையால் காசல்றி, மவுசாகலை, மேல் கொத் தலை மற்றும் நோட்டன் பிரிட்ஜ் நீர்த்தேக் கங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் தோட்டப்பகுதி மக்கள் பெரும் அவதியுறும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. தேயிலைத் தொழிற்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

## கொவிட் தொற்றில் இருந்து மேலும் பலர் பூரண குணம்!

கொவிட் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்த 417 பேர் நேற்று (செவ்வாய்க்கிழமை) பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 5 லட்சத்து 78 ஆயிரத்து 849 பேர் பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளனர்.

## மேலுமொரு மின்னுற்பத்தி நிலைய செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டன

கொழும்பு துறைமுகத்தில் உள்ள மின்னுற்பத்தி நிலையத்துக்கான எரிபொருள் பற்றாக்குறை காரணமாக திங்கட்கிழமை பிற்பகல் முதல் அதன் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தேசிய மின்கட்டமைப்பில் 60 மெகாவோட் மின்சாரத்துக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சக்திவலு அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி மின்முனையத்துக்குத் தேவையான 500 மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கப்படும் என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று குறித்த எரிபொருள் கிடைக்கப்பெற்றதன் பின்னர்கொழும்புதுறைமுகத்தில்உள்ளமின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உயர்தரப் பரிட்சைக் காலத்தில் ஆரம்பப் பிரிவுகள் நடைபெறும்!

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின்போது ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படமாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இம்மாதம் 7 ஆம் திகதி முதல் மார்ச் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என பாடசாலை விவகார மேலதிகச் செயலாளர் இ. டபிள்யு. எல்.கே. எகொடவெல தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அந்த காலப்பகுதியில் ஆரம்பப் பிரிவுகளுக்கு விடுமுறை வழங்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை சூழலை பேணுவதற்கு இடையூறான பாடசாலையாக இருந்தால் சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளுக்கு விடுமுறை வழங்குவதற்கும் குறித்த பாடசாலைகளுக்கு உரிய பணியிடங்களை பரிந்துரைப்பதற்கும் கற்றல் முறைகளை மேற்கொள்வதற்கும் உள்ளூராட்சி கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரீட்சைக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை பணிக்கமர்த்துமாறு அனைத்து பாடசாலைகளின் அதிபர்கள், வலய மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

## உயர்தரப் பரீட்சைக்கான கருத்தரங்குகள் மேலதிக வகுப்புகளுக்கு இன்று முதல் தடை!

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புடைய கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் மார்ச் 5 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள நிலையிலேயே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இந்தர் தடை உத்தரவை மீறினால் பரீட்சை சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும் உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதேநேரம் 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# போரால் பாதிப்புற்றோருக்கு நீதி பெற்றுத் தர நிதியில்லை

## அரசு கைவிரிப்பு

இறுதிக்கட்ட யுத்தத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கத்திடம் பணமில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பிரீஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சரின் இந்த கருத்து குறித்து, நிலைமாற்று கால நீதிப் பொறிமுறையை எதிர்பார்த்து கடந்த ஒரு தசாப்தகாலமாக வீதிகளிலும் சர்வதேச அரங்குகளிலும் போராடிவரும் பாதிக்கப்பட்ட மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

வடக்கில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி எல் பீரிஸ்ற்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் மற்றும் வடபகுதியில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜி எல் பீரிஸ்–

அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பு திருப்திகரமாக அமைந்தது எனவும் அபிவிருத்தியின் ஒரு பங்காளியாக இணைந்து செயற்படுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களைக் கோரியுள்ளேன் எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடர் குறித்த ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

ஜெனீவா அமர்வு தொடர்பான நிலைப்பாடு என்னவென்றால், கடந்த சில மாதங்களாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள எண்ணில் அடங்கா முன்னேற்றகரமான செயற்பாடுகள் தொடர்பாக உள்நோக்கத்துடன் அல்லாமல் புறநிலையில் இருந்து சர்வதேச சமூக சமூகம் பார்வையை செலுத்த வேண்டும். இவை பல வருடங்களாக மீதமாக உள்ள பிரச்சினைகள்.

அதனை நாம் உருவாக்கவில்லை. தற்போதுள்ள நிலைமைகளை மதீப்பீடு செய்யும் போது முன்னோக்கு மற்றும் சமநிலை காணப்பட வேண்டும். உலகில் இருக்கும் மிகவும் பிரச்சினைக்குரிய நாடாக இலங்கை இருக்கவில்லை.

பிரச்சினைகள் காணப்படும் இடங்களை பாருங்கள். நேரம், வளம், சக்தியை இதற்கு பயன்படுத்துவதில் அர்த்தம் இருக்கின்றதா? உலகில் உள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட நாடுகள், உயிர்காப்பு தடுப்பூசி மருந்தைப் பெற்றுக் கொள்வதற்கு பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன என்பதை மறந்துவிட வேண்டாம்.

கொவிட் தொற்றுக்கு எதிராகப் போராடும் அரைவாசி நாடுகளுக்கு தடுப்பூசி மருந்துகளே இல்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், வாய்மொழி மூல அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கும், எழுத்து மூலம் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும், விசேட பொறிமுறை களுக்கும் பல மில்லியன் கணக்கான டொலர் பணத்தை செலவிடுவதில் அர்த்தம் இருக்கின்றதா?

சூழ்நிலை மற்றும் பதில் நடவடிக்கை என்ற இரண்டு விடயங்கள் உள்ளன. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. களத்தில் உள்நாட்டு பொறிமுறை செயற்றிறன்மிக்கதாகக் காணப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணகத்துக்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி இலக்குகள், ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழு, உயர் நீதிமன்ற நீதியரசரின் கீழான ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு என பல்வேறு பொறிமுறைகள் காணப்படுகின்றன. இந்த அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பஸ் - டிப்பர் விபத்து 12 பேர் படு காயம்!



கொழும்பு – ஹொரணை பிரதான வீதியில் கும்புக சந்தி பகுதியில் நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை விபத்து ஏற்பட் டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று டிப்பர் ரக வாகனத்துடன் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் டிப்பர் சாரதி உட்பட 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் கழிவுகளை 120 நாள்களுக்குள் அகற்ற நடவடிக்கை!

கடலில் தீக்கிரையான எக்ஸ்பிரஸ்பேர்ல்கப்பலின் கழிவுகள் மற்றும் அழிவடைந்த பகுதிகளை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, 120 நாள்களில் குறித்த பணிகளை நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# நல்லாட்சி அரசாங்கம் இருந்திருந்தால் கொரோனா கட்டுக்குள் வந்திருக்கும்!

## ராஜித இப்படிக் கருத்து



நல்லாட்சி அரசாங்கம் இருந்திருந்தால் கொரோனா தொற்றால் மக்கள் இவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்க மாட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாட்டில் பதிவாகியுள்ள 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா இறப்புகளுக்கு அரசாங்கமே முழு பொறுப்பு என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டில் கொரோனாவை இல்லாதொழிக்கும் முயற்சி முற்றிலும் தோல்வியடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை, பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொற்று நோய் பரவும் அபாயம் தற்போது காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

# சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புக்கு தேவையான மசகு எண்ணெயை வழங்க அமைச்சரவை அனுமதி



சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புக்கு நிலையத்துக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த சுத்திகரிப்பு நிலையத்துக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக சைப்பிரஸ் நாட்டின் டெர்ரா நேவிஸ் குழு இனால் கோரப்பட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

180 நாள்கள் கடன் அடிப்படையில் மசகு எண்ணையை விநியோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவை அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தர பெறுகைக் குழுவின் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அதன் ஆரம்பக் கட்டமாக 4 லட்சத்து 50 ஆயிரம் பீப்பாய்கள் கொண்ட கப்பல் தொகையை விநியோகிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பரிந்துரைகளுக்கமைய குறித்த மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 269

**687. புலம்பெயர் அமைப்புக்கள் அப்படிப் பொது நிலைப்பாட்டுக்கு வந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்கும் அமைப்புக்களைச் சேர்ந்தோர் இணங்கி வருவார்களா?**

நாட்டில் தமிழ் மக்களின் இருப்பே கேள்விக்குறியாகி, காலங்கள் மிக விரைவாக அவர்களுக்கு எதிராக ஓடும் போது, யதார்த்தமான, விவேகமான வழிகளுக்கு இவர்களும் மக்களின் நன்மைகருதிவரவேண்டும். நான்அறிந்த தகவல்களில், போருக்கு முன்னும், போர்க் காலங்களிலும் சர்வதேசப் பரப்பில் இருந்த ‘தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக்கள்’ ஒரு கட்டுப்பாட்டுக்குக் கீழ் இயங்கின. போரின் முடிவின் பின்பும் தற்பொழுதும் ஒவ்வொரு நாட்டிலும் அவர்கள் தன்னிச்சையாகவும் விரும்பினால் மாத்திரமே மற்ற நாடுகளில் உள்ளவர்களுடன் சேர்ந்தும் பயணிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்களது தனிப்பட்ட பின்னணியில் ஒரு பொது நிலைக்குக் கொண்டு வருவது பல காரணங்களால் - மனித உரிமை செயற்பாட்டாளர் கிருபாகரன் கூறியதுபோல் - கஷ்டமாக இருக்கலாம். ஆனாலும் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு அவர்களை உள்வாங்க முயற்சிகள் மேற்கொள்வது முக்கியம். போருக்கு முன்னிருந்தே மனித உரிமைகள் மட்டத்தில் கிரமமாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட கிருபாகரன் போன்றோர் தங்களுக்கு அனுசரணையானவர்களுடன் இப்படியான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அவர் போன்றவர்கள் மனித உரிமை மட்டத்தில் பல விடுதலைப் புலிகளின் அமைப்பாளர்களுடனும், வணபிதா இம்மானுவேல், அன்ரன் பாலசிங்கம் தம்பதிகள், குமார் பொன்னம்பலம் போன்ற பலருடன் விடுதலைப் புலிகளுக்காகச் செயல்பட்டவர்கள்.



ச.வி.கிருபாகரன்



பாலசிங்கம்

இந்தியாவுடனான உறவுகளை மீட்டுப் பேணிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிரபாகரனுக்கு, பாலசிங்கத்துக்கு, அவர்களின் பல புலம்பெயர் அமைப்பாளர்களுக்கு இருந்தது. இலட்சியத்தின் நோக்கத்திற்காக வழிகள் மாற்றமடையலாம் என்பதையும் பிரபாகரன் ஊக்குவித்தார். ஆனால் அவர்களிடையே இருந்த சில அமைப்பாளர்களும் புலம்பெயர் அமைப்புக்களும் அதனை வளர விடவில்லை. இந்தியாவை விலத்திய சர்வதேச அனுசரணையை ஐ.நா மூலம் பெற்று முன்னேறிவிடலாம் என்ற நப்பாசைகள் அவற்றை முன்னேறவிடவில்லை.

கிருபாகரன் போன்றோர், முக்கியமாக விடுதலைப் புலிகளின் ஆதரவாக இயங்கிய அவர், இந்தியாவின் அனுசரணையை தமிழ் மக்கள் நாட வேண்டும், இந்தியாவிடம் போங்கள் என வெளிப்படையே வலிமையாகக் கருத்தாங்கள் செய்பவர்.

அவர்கள், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக்களைக் கூட்டாக ‘புலம்பெயர் அமைப்புக்களின் பொது நிலைப்பாடு’ என்றநோக்கத்திற்குள்கொண்டுவரவேண்டும், அவர்களின் சில தரப்புக்கள் அதற்கு இணக்கம் தராது தனித்துத்தான் நிற்போம் என்றால் தமிழ் மக்களுக்கு தங்களது எதிர்காலத்திற்காக ஒரு பாரிய பொறுப்பு இருக்கிறது, விடுதலைப் போராளிகள் காலத்திலிருந்து, பின் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளையும் தட்டிக் கேட்காது பார்வையாளர்களாயிருந்த நிலையில் இருந்து மாறி பொறுப்புக்களைக் கையிலெடுத்து, அந்தத் தரப்புக்கள் (தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக்கள், ஆதரவாளர்கள்) கிழிக்கும் கோட்டிற்குப் பக்கத்தில் அவர்களது பொதுநிலைப்பாடு என தமிழ்மக்கள் தமது பெரிய கோட்டைக் கீறி, இருகோடுகள் தத்துவத்தில் அதனை அர்த்தமற்றதாக்க வேண்டும். முரண்பட்டு அழித்து வேதனைகள் தேடவேண்டியதில்லை, ஆனால் மக்களின் எதிர்காலத்துக்காக அவர்கள் இருப்புக்காக, தேசியத்துக்காக, அவர்கள் திட சங்கற்பம் கொள்ள வேண்டும்.

**688. 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல் நடத்தக்கோரி இந்தியாவுக்குக் கொடுத்த சமர்ப்பணத்தால் தற்பொழுது நடக்கும் திருவிழாக்களுக்கு தேங்காய் உடைத்திருக்க வேண்டுமா?**

13 ஆம் திருத்தத்தையும் மாகாண சபைகளையும் நீக்கி ஒரு பலமான ஒற்றையாட்சியை நோக்கிப் போவதான நகலையே புதிய அரசமைப்பு வடிவமைப்புக் குழு அரசாங்கத்துக்கு கையளித்துள்ளது என சிங்கள ஊடகங்களில் கசிந்த செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த நிலையில் சிங்கள மக்களுக்கு வாக்களித்தபடி சிங்கள, பௌத்த பெருண்பான்மையைப்புதிய அரசமைப்புச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதி நிறைவேற்ற முற்படுவார். அரசமைப்புச் சட்டம் இயங்குவது ஒரு நாட்டின் இறைமை என்று வாதிடப்படும். எல்லாத் தமிழ்த் தரப்புக்களும் தங்களது இலட்சியங்களின் அடிப்படையிடில் சமர்ப்பணங்கள் வைத்தன. ஆயினும் வழமைபோலவே அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

சிங்கள, பௌத்த பெரும்பான்மை ஆமைபோல் நிதானமாக, வெற்றிக் கம்பத்திற்கு வந்திருக்கின்றது. ஒப்பந்தம் ஆக்கப்பட்டு இந்திய இராணுவம் திருகோணமலையை நோக்கி நகர்ந்தபோது சிறிமாவோ புரத்திலிருந்து புத்தரையும் விட்டுவிட்டு ஓடிய சிங்கள மக்களின் முகவர்கள், இன்று தொல்லியல் திணைக்களத்தின் மூலம் கன்னியாவில் இருந்த பாரம்பரிய சிவன் கோவிலின் கதவுகளை மூடியுள்ளார்கள்.



பிரபாகரன்

ஆகவே 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த எப்பொழுதோ நடவடிக்கைகள் எடுத்திருத்தல் வேண்டும். ஆக அதனையே இல்லாதொழிக்கும் நிலை ஏற்படும் போதே அதை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்கிறார்கள். 13 ஆம் திருத்தத்தை அரசமைப்புச் சட்டத்தில் இருந்து இல்லாதொழிக்கும் முயற்சியை அதன் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்து பொறுப்பு நின்ற இந்தியாவைக் கேட்பது நியாயம். அதை நிலைநிறுத்தவோ தமிழர்களுக்கு நீதியான தீர்வைப் பெற்றுத்தரவோ இந்தியாவுக்கு நடந்தவைகளால், நடத்தப்பட்டவைகளால், ஒரு தார்மீகக் கடமையும் உண்டு.



குமார் பொன்னம்பலம்

ஆனால் ஒரு முட்டையிட்ட கோழிகள் மாதிரி இவ்வளவு கொக்கரிப்புக்களும் ஊடகப் பரபரப்பும் மனவேதனைகள் தரும் பலவான கருத்து மோதல்களை ஏற்படுத்தி, தமிழ் மக்களிடையே அதற்கு எதிர்ப்புக் கிளம்ப வைத்துத் தேசியத்துக்கும் உண்மையான தேசியத்துக்கும் இடையே கோடுகள் கீறப்பட்டு, இவை எல்லாம் பிரிவினைகளை வெளிக்காட்டி, சிங்கள பேரினவாதத்துக்கு எல்லோருமே துணை சேர்க்கிறார்கள். அமுத்தமாக, ஆழமாக, கமுக்கமாக செய்யப்பட வேண்டிய ஒன்றை, ‘சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி’ என்ற மாதிரிப் பிரசித்தத்துக்காக செய்து முடித்திருக்கிறார்கள்.

அது வேதனையானாலும், அந்த நாரதர் கலகம் சிங்கள, பௌத்த தரப்புகளிடையே அங்கலாய்ப்பையும், பழையபடி இந்தியாவிற்கெதிரான எழுச்சியையும் ஏற்படுத்தியிருப்பதைக் காணலாம். அது நன்மைக்குக் கொண்டு செல்லலாம். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில் மாவீரர் நினைவுகளுக்கோ, மற்ற அரசியல் போராட்டங்களுக்கோ கொரோனாவைப் பாவித்து நீதிமன்ற தடை உத்தரவுகள் எடுக்கப்பட்டு அடக்கப்பட்டன. ஆனால் கஜேந்திரகுமாரின் பவனிகளுக்கு நடக்கவில்லை. திலீபன் நினைவிடத்தில் இருந்தே, மஞ்சள் - சிவப்பு வர்ணங்களுடன் கோலாகல ஆரம்பத்துக்கு ஒத்துழைக்கப்பட்டது.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# வடகொரியாவிடமிருந்து ஆயுதங்கள் போர்க்காலத்தில் நாடு கொள்வனவு

## நிதி அமைச்சர் பஸில் தகவல்



உச்ச கட்ட போர் இடம்பெற்ற தருணங்களில் வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்ததாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஞாயிறு சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்த விடயம் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க - இலங்கை இரட்டை பிரஜாவுரிமை கொண்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வடகொரியாவிடமிருந்து ஆயுதம் கொள்வனவு செய்ததாகத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கறுப்புச் சந்தைப் பணத்தைக் கொண்டு இவ்வாறு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் கறுப்புச் சந்தைப் பயன்படுத்தி எரிபொருள் கொள்வனவு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் எரிபொருள் கொள்வனவு செய்ய போதியளவு டொலர்கள் இல்லாத தருணத்தில், புறக்கோட்டைக்குச் சென்று வர்த்தகர்களிடம் டொலர்களைத் திரட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கை எடுத்தே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பணம் செலுத்தப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்டியல் கறுப்புச் சந்தை பண கொடுக்கல் வாங்கல் முறைமை நியாயமானது என்ற வகையில் பஸில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### திவிநெகும நிதி மோசடி வழக்கில் பஸில் விடுதலை!

திவிநெகும, நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பான மற்றுமொரு வழக்கிலிருந்து நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2015 ஜனாதிபதித் தேர்தலின் போது, திவிநெகும அபிவிருத்தி நிதியத்துக்குச் சொந்தமான 2 ஆயிரத்து 292 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தி நாட்காட்டி அச்சிடப்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கில் இருந்து திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்கவும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் விசாரணை இடம்பெற்ற நிலையில் சாட்சிகளை அழைக்காமல் பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, மஹிந்த ராஜபக்ஷவின் உருவம் பொறிக்கப்பட்ட 50 லட்சம் நாட்காட்டியை அச்சடித்து விநியோகித்தமை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கைத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

### ஓட்டோ ரயிலுடன் மோதியதில் காயமடைந்த நால்வர் சாவு!

காலி – பூஸா – வெல்லபட சந்தியில் ரயில் கடவையில் பயணித்த ஓட்டோ ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.45 மணியளவில் அதே பிரதேசத்தை சேர்ந்த தாய், தந்தை, மகன் மற்றும் மருமகள் ஆகியோர் பயணித்த ஓட்டோ வவுனியா நோக்கி சென்ற ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் காயமடைந்த நால்வரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

### அதிக வருமானம் ஈட்டும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மேலதிக வரி!

200 கோடிக்கும் அதிகமான வருமானம் ஈட்டும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு மேலதிக வரி விதிக்கும் சட்டமூலம் ஒன்றற நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்பிக்க அனுமதி கோரி நிதி அமைச்சரால் அமைச்சரவைப் பாத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை வழங்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார். சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குமாக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சமுதாய மேம்பாட்டு துறைக்கான வன்னி இணைப்பாளர் நியமனம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சராகவும், ஜீவன் தொண்டமான் இராஜாங்க அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ள சமுதாய மேம்பாட்டு துறையின் வன்னி தேர்தல் தொகுதியின் இணைப்பாளராக பாலச்சந்திரன் வினோத் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான நியமனக் கடிதம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் யாழில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வாதார உதவிகளை வழங்குதல், கிராமப் புற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான உதவிகளை பெற்றுக்கொடுத்தல், பேரிடர் கால நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், மனிதவள மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுத்தல் என்பன இந்தத் துறையின் பணியாக கட்டமைக்கப்பட்டுள்ளன என அறிய முடிகிறது.

இது தொடர்பாக வினோத் தெரிவிக்கையில் –

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் வன்னி தேர்தல் தொகுதியில் எங்கெல்லாம் தேவைப்படுகிறது என்பதை அடையாளம்கண்டு அமைச்சர் மற்றும் அமைச்சகங்களின் பார்வைக்கு கொண்டு செல்வதுடன் அதற்கான தீர்வை பெற்றுக்கொடுத்தல் எனது பணியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

பொறுப்பேற்றுள்ள மக்களுக்கான இந்தச் சேவையை எவ்வித குறையுமின்றி சீரும் சிறப்புமாக செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் மீது நம்பிக்கை கொண்டு இந்தச் சேவைக்கு என்னைத் தேர்ந்தெடுத்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். – எனத் தெரிவித்தார்.

# 40 வருட காலப் போராட்டங்களின் பின்னர் லண்டனில் தமிழருக்கு கிடைத்த அங்கீகாரம்

பிரித்தானியாவில் 40 வருடங்களாக வாழப் போராடிய இலங்கைத் தமிழர் ஒருவர் இறுதியாக வெற்றி கண்டுள்ளார்.

40 ஆண்டுகளுக்கு முன்னர் கணக் காளராகப் பயிற்சி பெற பிரித்தானியாவுக்கு வந்த இலங்கைத் தமிழரான பொன்னம்பலம் ஜோதிபாலா என்பவர் தற்போதே அனுமதி பெற்றுள்ளார்.

பிரித்தானிய உள்துறை அலுவலகத்தின் தவறுகள் காரணமாக வீடற்ற நிலையில் வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் தனது 70 ஆவது பிறந்த நாளுக்கு சில மாதங்களுக்கு முன்னரே அவருக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

69 வயதுடைய இலங்கைத் தமிழரான பொன்னம்பலம் ஜோதிபாலா, இப்போது வயதானவராக இருந்தாலும், இறுதியாகத் தனக்கு கிடைத்த வழக்கு தீர்ப்பு குறித்து தான் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2003 ஆம் ஆண்டு மோசடி மற்றும் திருட்டு தொடர்பான குற்றச்சாட்டில் தண்டனை பெற்றமையால் உள்துறை அலுவலகம் அவரை நாடு கடத்தத் திட்டமிட்டது. ஆனால் அவர் மேல்முறையீடு செய்தார்.

2006 ஆம் ஆண்டு குடிவரவு நீதிபதி அவருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார். ஜோதிபாலாவின் மேல்முறையீட்டில் அவர் வெற்றி பெற்றார் என பதிவிடுவதற்கு பதிலாக அவர் தோல்வியடைந்து விட்டார் என்று உள்துறை அலுவலகம் தவறாகப் பதிவு செய்துள்ளது.

எப்படியிருப்பினும் அதிகாரிகள் அவரை பிரித்தானியாவில் இருந்து வெளியேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் அவர் நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை.

இந்த நிலையில் ஜோதிபாலாவின் வழக்கறிஞர் நாக கந்தையா கடந்த ஆண்டு உள்துறை அலுவலகத்துக்கு ஒரு கடிதம் அனுப்பினார், இந்த விவகாரத்தை விரைவாகத் தீர்க்காவிட்டால், நீதித்துறை மறுஆய்வு நடவடிக்கைகளைத் தாக்கல் செய்வேன் என வழக்கறிஞர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். இந்த நிலையில் அவர் தான் விரும்பியபடி பிரித்தானியாவில் வாழ உள்துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

# முகமாலையில் நூதன கொள்ளை

## பொலிஸ் தீவிர விசாரணை

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலையில் உள்ள கிராமப்பகுதியில் அமைந்துள்ள சிறிய பல்பொருள் வாணிப உரிமையாளரான பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியை நூதனமான முறையில் கொள்ளையடித்துள்ளனர். இது பற்றித் தெரிய வருவதாவது :-

பல்பொருள் வாணிபத்திற்கு மோட்டார் சைக்கிளில் இருவர் வந்துள்ளனர்.

கடைக்குள் ஒருவர் செல்ல மற்றவர் மோட்டார் சைக்கிளில் நின் றுள்ளார். கடைக்குள் வந்த நபர் கடையிலிருந்த பெண்ணிடம் பொருள்கள் சிலவற்றைக் கேட்டுள்ளார்.

அவர் கேட்ட பொருளைக் கடை உரிமையாளரான பெண் மணி எடுக்க முற்பட்ட வேளை அந்தப் பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்து அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

முகமாலை பகுதியில் தொடர்ச்சியாக கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன எனவும் இந்தச் சம்பவம் தொடர்பாகப் பளை பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2022இல் வெளியிடப்பெற்றது.

# பலாலி - வளளாய் வீதியும் முடக்கம்



(எஸ். நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக யாழ்ப்பாணம், பலாலி - வளளாய் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

இதனால் பருத்தித்துறை - பொன்னாலை வீதியின் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது. போராட்டத்தை முன்னெடுத்த மீனவர்கள் வீதிகளின் குறுக்கே படகுகள் மற்றும் வலைகளைப் போட்டு தமது போராட் டத்தை முன்னெடுத்தனர்.

## ராஜபக்ஷ குடும்ப அரசின் வீழ்ச்சிக்கு ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையில் இருந்து விலகி, வேலைத்திட்டங்கள் செயலிழந்து, விழுமிய மதிப்புக்களால் வீழ்ச்சி கண்ட நாட்டால் முன்னேற முடியாது எனக் குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர், முட்டைத் தாக்குதல் போன்ற கேவலமான செயல்கள் சீரழிந்த ராஜபக்ஷ குடும்ப அரசின் யதார்த்தத்தையே புலப்படுத்துகின்றன எனவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த - அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய - திறமையான இளம் தலைமுறையை உருவாக்கும் நோக்கிலான - வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணனி உபகரணங்களை வழங்கும் முன்னோடித் திட்டமான 'பிரபஞ்சம்' திட்டத்தின் 11ஆவது கட்டம் நேற்று ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த நவீன உலகில் வளமான டிஜிட்டல் எதிர்காலத்துக்காக இந்நாட்டின் இளைய தலைமுறையை, தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற, ஸ்மார்ட் கணினிப் பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகமாகக் கட்டியெழுப்பும் 'பிரபஞ்சம்' முன்னோடித் திட்டத்தின் பதினோராவது கட்டத்தில், எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா மதிப்பிலான வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை மதவாச்சி அகுநொச்சி மகா வித்தியாலயத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வழங்கிவைத்தார்.

இதன்போது உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் முகமாக தகவல் தொழில்நுட்பப் புரட்சியை முன்கொண்டு செல்வது அதன் ஒரு தொடக்கங்களில் ஒன்றாகும். அதிகாரம் இல்லாமலேயே, நாம் அந்தப் புரட்சியை நடத்துகின்றோம்.

பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக தகவல் தொழில்நுட்பப் புரட்சி, டிஜிட்டல் பொருளாதாரப் புரட்சி என்பவற்றைக் கூறலாம். இந்தப் புரட்சி உலகின் பல நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அமெரிக்க பில்லியன் டொலர் வியாபாரம் என அடையாளப்படுத்தப்படும் கங்வேனன் வியாபாரம் உலகில் மிக வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது. இவற்றை உருவாக்கும்போது நம் நாட்டிலும் அந்நியச் செலாவணி பிரச்சினையோ - பற்றாக்குறையோ ஏற்படாது.

பிரபஞ்சம் போன்ற வேலைத்திட்டங்கள் குறித்து சிலர் கபடத்தனமாகப் பேசுகின்றனர். அவ்வாறானவற்றை நான் கருத்தில்கொள்வதில்லை.

இந்நாட்டின் குழந்தைகளுக்காக நாடு முழுவதும் பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார்.

## கோட்டா, மஹிந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தவிர்ந்த தடை விதிக்கப்படக் கோரப்பட்டுள்ள ஏனையோர் விவரம் வருமாறு:-

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா, தற்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, சத்தியபிஞ்சர லியனகே, தற்போதைய பாதுகாப்பு செயலர் ஜெனரல் கமல் குணரத்ன, முன்னாள் யாழ். மாவட்ட தளபதி மஹிந்த ஹத்துருசிங்க, முன்னாள் படைத்தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி, முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, பஞ்சரசன்ன சில்வா, நந்தன உடவத்த, சாகி கல்லகே, ஜி. டி. ரவிபிஞ்சரா, முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொட, அட்மிரல் திசார ரணசிங்க, சோமதிலக்க திஸாநாயக்க, மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் முன்னாள் கட்டளைத் தளபதி ஆகியோர் அடங்குகின்றனர்.

விடுதலை புலிகளின் ஒன்பது புலம்பெயர் அமைப்புகளும் இந்த கோரிக்கைக்கு ஆதரவளித்துள்ளன என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

## இரு பொலிஸ் குழுக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

குறித்த குழுவினர் மது போதையில் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29ஆம் திகதி இரவு குறித்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கம்பஹா சுற்றிவளைப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரிகளுக்கும் சிலாபம் பிரிவிலுள்ள பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் இவ்வாறு தகராறு ஏற்பட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அதிகாரிகள் குழுவொன்றும் மற்றும் மாரவிலவில் இருந்து மற்றுமொரு திருமண நிகழ்வில் கலந்துகொண்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் கொழும்பு - கண்டி பிரதான வீதியில் காரிலும் வந்துள்ளனர்.

வரக்காபொல பிரதேசத்தில் இவர்களது வாகனங்கள் ஒருவரை ஒருவர் முந்திச் செல்ல முற்பட்டபோது மோதல் ஏற்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு வரகாபொல பொலிஸார் வந்த போதிலும் மோதலைக் கட்டுப்படுத்தப் பெரும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் சிலாபம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி, கம்பஹா சுற்றிவளைப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் காயமடைந்த நிலையில் வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், சம்பவம் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.


## வெடிகுண்டு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் ஒன்று காணப்படுவது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த குண்டு மீட்கப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622




**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.